<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு.**M.**நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **42/2024** நாள்: **24.10.2025** வா.சா.1 – ராமநாதன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பிரதிவாதிகளுக்கு எதிராக இழப்பீட்டு தொகை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் State Bank of India வங்கியில் கோபிசெட்டிபாளையம் அருகில் உள்ள தூக்கநாயக்கன்பாளையத்தில் கிளை மேலாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் State Bank of India வங்கி, அமராவதி கிளையில் உள்ள லாக்கரை மாதத்திற்கு 1 அல்லது 2 முறை திறந்து பொருட்களை வைப்பேன். 11.01.2021 அன்று மேற்படி கிளையில் நான் லாக்கரை திறப்பதற்காக மதியம் சுமார் 2.30 மணிக்கு சென்றேன். மேற்படி நேரம் உணவு இடைவேளை என்றால் சரிதான். மேற்படி கிளையில் எப்போதும் வாடிக்கையாளர் கூட்டம் இருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி கிளைக்கு நான் செல்லும் போது கிளை மேலாளர் மற்றும் லாக்கரை கையாளும் பராமரிப்பு அலுவலர் ஒருவர் இருந்தார் என்றால் சரிதான். நான் மேற்படி கிளைக்கு சென்ற பிறகு வங்கியில் உள்ள பியூன் லாக்கர் கதவையும், பாதுகாப்பு பெட்டக கதவின் அறையையும் சாவியை வைத்து திறந்தார். அவர் திறக்கும் போது நானும் உடன் சென்றேன். நான் மேற்படி வங்கியின் வாடிக்கையாளர் என்றால் சரிதான். நான் மேற்படி பாதுகாப்பு பெட்டக அறைக்கு செல்ல வேண்டும் என்றால் வங்கியின் அதிகாரியின் அனுமதி பெற்று தான் செல்லமுடியும் என்றால் சரிதான். நான் மேற்படி பெட்டக பொறுப்பு அதிகாரியிடம் அனுமதி வாங்காமல் அன்றைய தினம் சென்றேன் என்றால் சரியல்ல, அனுமதி பெற்று உரிய கோப்புகளில் கையொப்பம் பெற்ற பிறகு தான் பாதுகாப்பு பெட்டக அறைக்கு சென்றேன் என்று சாட்சி கூறுகிறார். நான் உரிய

கோப்புகளில் கையெழுத்திட்டேன், ஆனால் அனுமதி பெறாமல் உள்ளே சென்றேன் என்றால் சரியல்ல. நான் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.2/2024 என்ற ஒரு வழக்கை வேறு பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் நஷ்ட ஈடு கேட்டு பல வழக்குகள் தாக்கல் செய்யும் நடவடிக்கையுள்ள நபர் என்று சொன்னால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.24 19:03:58 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.